Registered as a News Paper   பக்கங்கள் 06   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2024   தை 17   (30-01-1993)   சனிக்கிழமை   ஓசை 347

## நாகதாளியிலிருந்து சுவை மிகு உணவு

நாகதாளி செடியிலிருந்து சுவைமிகுந்த உணவுப் பொருள்கள் தயாரிக்க முடியும் என்று ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத்தெரிய வருகின்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் இது பற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது; நாகதாளியின் இளந்தண்டுகளில், உள்ள முட்களும், தடித்த தோலும், தணலில் வாட்டி நீக்கப்பட்டு தன் (5ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் பாதை திறப்பதற்கு செஞ்சிலுவை அவசர முயற்சி

## அதிகாரிகள் அடுத்த வாரம் பலாலிக்குப் பயணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கான பாதையைத் திறப்பதில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இச் சங்கத்தின் பிரதிநிதிகள் இது தொடர்பான நடவடிக்கைகளைக் கவனிக்கவென அடுத்தவாரம் பலாலி படைத் தளத்திற்குச் செல்லவுள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகமூடாக யாழ். குடாநாட்டிற்கு அத்தியாவசியப்பொருள்களை எடுத்து வருவதற்காக பாதையைத் திறந்துவிட விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசாங்கமும் சம்மதம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் யாழ். குடாநாட்டினுள் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு காங்கேசன்துறை துறைமுகத்தை விரைவில் திறப்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீவிர நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அடுத்த வாரம் பலாலி செல்லும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இப்பாதை குறித்து முக்கரப்பு உடன்பாடு ஒன்றைச்செய்துகொள்வதிலும் தீவிர கவனம் செலுத்துவர்.

மேலும், இப்பாதையில் சோதனை நிலையங்களின் அமைவிடங்கள் குறித்தும், வாகன போக்குவரத்திற்கான திகதி குறித்தும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துவர் எனவும் தெரிய வருகின்றது.

## கிளாலிப் படகு படுகொலை; கைதாகிய பொதுமக்கள் பலாலியில் உள்ளனரா?

[யாழ்ப்பாணம்]

கிளாலிப் படுகொலையின் போது சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் பலாலியில் உள்ளனரா என்பதை அறிந்துகொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இம் முயற்சியில் யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் ஈடுபட்டுள்ளதாக அறிய வருகின்றது. இந்த முயற்சியின் முதற்கட்டமாக அரச அதிகாரிகளுடன் அரச அதிபர் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அண்மையில் கொழும்பில் அரச அதிபர் தங்கியிருந்த சமயம் இப் பேச்சுவார்த்தையை நடாத்தியதாகவும் இதன் அடுத்த கட்டமாக கூட்டுப் படைகளின் தலைமை அலுவலக அதிகாரிகளுடனும் சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகளுடனும் அரச அதிபர் தொடர்பு கொள்ள இருப்பதாகவும் தெரியவருகின்றது.

மேற்படி கடலில் கடந்த 2 ஆம் திகதி சிறிலங்கா கடற்படையினரால் நடாத்தப்பட்ட படுகொலைச் சம்பவத்தின் போது பல அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் (5 ஆம் பக்கம் பார்க்க)

## நளின் டீ. சில்வா தலைமையிலான அரச எதிர்ப்பியக்கம் தெற்கில் வலுவடைகிறது

[கொழும்பு]

தென்பகுதி தீவிரவாத இயக்கமான ஜே. வி. பி. தீவிரவாத இயக்கத்துக்குப் பதிலாக கணிதப் பேராசிரியர் நளின் டி சில்வாவின் அரச எதிர்ப்பு இயக்கம் செல்வாக்குப் பெற்றுவருகிறது.

"ஜாதிக சிந்தனைய" என்ற பாரம்பரியப் பண்பாட்டைப் புதுப்பிப்போம் என்ற கோட்பாட்டின் கீழ் இவரது எதிர்ப்பியக்கம் உருவாகி வருகிறது. இவருக்கு மாணவர்கள் மட்டத்தில் அதிக செல்வாக்கு கிடைத்து வருகின்றது.

மாணவர்களது அரசுக்கெதிரான இயக்கமும் சம்பள உயர்வு கோரும் பல்கலைக்கழக ஆசிரியர்களது அரச எதிர்ப்பியக்கமும் இணைந்து நளின் டி சில்வாவுக்கு ஆதரவான இயக்கமாக தற் (5ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. வளர்வதாக அரசு பூச்சாண்டி விடுகிறது

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

[கொழும்பு]

"நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி ஆட்சியில் தொடர்ந்தும் அமர்ந்து கொள்வதற்காக பிரேமதாசா அரசு மீண்டும் ஜே. வி. பி. என்று கூறிபூச்சாண்டி காட்டுகிறது" இவ்வாறு அரசு மீது பலவேறு எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

வடக்குகிழக்கில் மட்டுமன்றி நாடு முழுவதும் அவசரகால சட்டத்தின் கீழ் ஆட்சி நடாத்துவதற்கு அரசு விரும்புகிறது. இதன் காரணமாகவே ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் தலை தூக்கியுள்ளதாக மக்களை அரசு மிரட்ட முயல்கிறது. இந்த முயற்சியாகவே அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் வானொலி தொலைக்காட்சி ஆகியவற்றில் எல்லாம் ஜே. வி. பி மீண்டும் தலைதூக்கியுள்ளது என்ற போலியான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இது ஜனாதிபதி பிரேமதாசா தனது ஆட்சியை நீடிப்பதற்காக கையாளும் தந்திரம் என்று எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

## கைதான சுவிஸ் பிரஜை நாடு கடத்தப்பட்டார்

[கொழும்பு]

அநுராதபுரத்தில் கைதான சுவிஸ் பிரஜை கடந்த வியாழன்றிரவு நாடு கடத்தப்பட்டுள்ளார். புலிகள் இயக்கத்தின் கடிதமொன்றை கொண்டு வந்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட ஏ. என். ஸக்வேஇசட் வியாழக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து நாடுகடத்தப்பட்டுள்ளார். இவர் நேற்றுக் காலைபுறப்பட்ட டுபாய் ஊடான விமான மூலம் பயணமானார். இந்த சுவிஸ் பிரஜை மீண்டும் ஜெனீவாவுக்கு செல்வார் என்றும், இவரின் பயண நோக்கம் என்னவென்று தெரியாது என்றும் அரசாங்க (5ஆம் பக்கம் பார்க்க)

## ஏழைகள் உயர்கல்வி கற்பதை ஐ.தே.க. அரசு விரும்பவில்லை

### பேராசிரியர் ஐ.பி. எதிரிசிங்க

(கொழும்பு)

சாதாரண மக்கள் உயர் கல்வி கற்பதை ஐ.தே.க அரசு விரும்பவில்லை. மாறாக சாதாரண மக்கள் சாதாரண கல்வியையே கற்க வேண்டும் என்பதில் அக்கறை செலுத்துகிறது. அரசின் கடந்த பதினைந்து வருட செயற்பாடுகள் இதனைத் தெளிவு படுத்துகின்றன என பல்கலைக்கழக ஆசிரியர் சங்க செயலாளர் பேராசிரியர் ஐ. பி. எதிரி சிங்க பி. பி. சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய அப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது; இத்தகைய கொள்கையினாலேயேதான் அரசாங்கம் பல்கலைக்கழகம் தொடர்பான விடயத்தில் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. பல்கலைக்கழகம்தொடர்பான (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்திரியாவில் இறந்தோர் தென் இலங்கையர்களாம்

ஆஸ்திரியாவின் தலைநகர் வியன்னாவிலிருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவில் கடந்த புதனன்று இறந்து கிடக்கக் காணப்பட்ட ஐந்து பேரும் தென்னிலங்கைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த ஐவர் பற்றியும் மேலதிக விபரங்களைப்பெறும் முயற்சியாக வெளிவிவகார அமைச்சு மேற்கு ஜேர்மனியின் பொன் நகரில்இருக்கும் தூதுவருடன் தொடர்பு கொண்டுள்ளது.

## மக்கள் குடியிருப்புகள் மீது நள்ளிரவில் எறிகணை வீச்சு

### ராணுவ வாகன இரைச்சலும் கேட்டன

(யாழ்ப்பாணம்)

கட்டுவன், தெல்லிப்பழை, அளவெட்டி பகுதிகளில் உள்ள இராணுவத்தினர் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏழாலை, துர்க்காபுரம், அளவெட்டி பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை தாக்குதல்களை நடத்தினர்.

இதேவேளை கட்டுவன் பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றதாகவும், தெல்லிப்பழை வீதி, கட்டுவன் வீதிகளில் கனரக வாகனங்களின் நடமாட்டத்தின் ஒலிகளும், இராணுவத்தினரின் கூச்சல் ஒலிகளும் கேட்டதாகவும், இதன் காரணமாக தாங்கள் அச்சம் அடைந்து வெளியேறியதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதே வேளையில் நேற்று நண்பகல் தொடக்கம் மாலை வரை உலங்குவானூர்தியின் நடமாட்டம்அதிகளவு காணப்பட்டதோடு காவலரண்களிலிருந்து துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றது. (நி)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பத்மநாதன் சுரேஷ் ஆனந்தன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் அத்தாட்சிப் புத்தகம் 27-01-93 அன்று புதிய செம்மணி வீதிக்கும், வேனா தோப்புக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சசி கூல் பார் கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4168)

### வாடகைக்கு

படிக்கும் மாணவிகள் அல்லது வேலை செய்யும் பெண்களுக்கு மட்டும் அறைகள் வாடகைக்கு உண்டு நேரில் வரவும். "பம்பாதரன் மாளிகை", 20/1, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4054)

### விற்பனைக்கு

HONDA ஜெனரேட்டர், வீடியோ கமரா, 180 டெக், J.V C மிக்ஸர், அடில். கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு, B S. போட்டோ, 40 A, ராஜேந்திரா வீதி, குருநகர். (சி/5899)

### வியாழ வக்கிரம் ஆரம்பம்

29-1-93 முதல் வியாழன் வக்கிரமடைகின்றது. வியாழ வக்கிரமும் புத்தாண்டுப் பலன்களும் ரூ 8/- எங்கும்விற்பனையாகின்றது. ஜாதகம், எண் ஜோதிடம், பார்க்க, கணிக்க நேரில் சந்திக்கலாம், PROF. சத்தியதாஸன் பத்துவீட்டுத் திட்டம், கட்டுடை (4171)

### தையற் பயிற்சி வகுப்புகள்

அனுபவம் வாய்ந்த டிப்புளோமாத் தகைமை உடைய ஆசிரியையால் 1 2 93 தொடக்கம் தையற் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும். விஞ்ஞான முறையிலான வெட்டுகளும் சித்திர வேலைப்பாடுகளும் பயிற்றப்படும். 414. கோவில் வீதி நல்லூர். (4174)

### சைவசமய அறிவுப்பரீட்சை 1993

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடாத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை விண்ணப்பங்களை பூர்த்தி செய்து ஆலயத்தில் ஒப்படைக்கவும். பரீட்சை நடைபெறும் நாள் 7-2-93 ஞாயிறு பி. ப. 2 மணி (4180)

### பற்சிகிச்சை நிலையம்

சென்றல் கிளினிக் [எஸ் பி சாமி அன்கோ கட்டிட பின் பகுதி] யாழ்/ பஸ்நிலையம் அருகில் மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். பா நே:- தினசரி 12ந.ப - 2பி. ப வரை (4055)

## இரு வாரங்களில் 38 படை பலி

(கொழும்பு)

கடந்த இருவாரங்களுக்குள் மட்டும் முப்பத்தெட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பதாகவும், இராணுவத்தினர் பத்துப்பேர் காயமடைந்திருப்பதாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய கூட்டுப்படைத் தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கம்மன தெரிவித்தார்.

---

உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

யாழ்.மாவட்ட இந்துஇளைஞர் பேரவையின்

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 31-01-1993 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு நல்லூர் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல இந்து இளைஞர் மன்றங்களும் தவறாது இருபிரதிநிதிகளை அனுப்பிகலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம.

வணக்கம்

வே. கெ. தனபாலன்
கௌரவ தலைவர்

சி. சி. வரதராசா
கௌரவ பொதுச்செயலாளர்

(சி-5900)

---

பச்சிலைப்பள்ளி ப.நோ,கூ. சங்கம், பளை.

( வரையுள்ளது )

## முக்கிய அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும், நுகர்வோர்களுக்கும்
பங்குப் பணம் ரூபா 100/-

1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டத்திற்கமைய உபவிதி 18 (1) ஒரு பங்கின் பெறுமதி ரூ 100/- ஆகும்.

பங்குப் பணப் பெறுமதியை ரூ 100/- ஆக அதிகரிக்காத தற்போதைய அங்கத்தவர்கள் 05-03 1993 இற்குப் பின்னர் அங்கத்தவ உரிமையை இழந்து சங்கத்தில் கிளைக்குழு உறுப்பினராகவோ, பொதுச் சபை உறுப்பினராகவோ, பணிப்பாளர் சபை உறுப்பினராகவோ பதவி வகிக்க முடியாததுடன். வாக்களிக்கும் உரிமையினையும் இழந்து விடுவர்.

05-03-1993 இற்குப் பின்னர் பங்கு நிலுவையைச் செலுத்தினாலும், செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடம் அங்கத்துவ உரிமையை அனுபவிக்கக் காத்திருக்க வேண்டும்.

எனவே கால தாமதமின்றி தற்போது அங்கத்தவர்களாக இருப்பவர்கள் தமது பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு 05-03-1993 இற்கு முன்னர் தங்கள் கிளைகளில் பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்துவதுடன் சங்க வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் மேலதிக விபரங்களுக்குச் சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்,

செ. மார்க்கண்டு
தலைவர்

த. நாகேஸ்வரன்
செயலாளர்

(சி-5902)

---

## 15-ம் நாள் இதய அஞ்சலி

"இந்திய அரசின் வஞ்சனையால்
வங்கக் கடலில் சங்கமமான
தங்கத் தளபதி கேணல் கிட்டுவிற்கும்
பங்கமில தம் பங்கினை ஈந்த
வீரவேங்கைகள்
ஒன்பதின்மருக்கும் எங்கள் இதய
அஞ்சலிகள்"



கமநலசேவைகள் உத்தியோகத்தர்கள்,
யாழ் மாவட்டம்.

(4179)

---

உ

அளவெட்டி

கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்

## சங்காபிஷேகம்

மேற்படி சங்காபிஷேகம் வருடாவருடம் நாட்டின் நலன் வேண்டி நடாத்தி வந்த தினம் 3-2-93 புதன் கிழமைஆதலால் அவ்வைபவத்தை இம் முறையும் சிறப்பாக நடாத்தத் தீர்மானித்திருப்பதால் சகல விநாயக அடியார்களும் அதற்கு வேண்டிய பண உதவி. பொருள் உதவி செய்ய விரும்புவோர் அவற்றைக் காரியாலயத்தில் கொடுத்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இப்படிக்கு
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தாக்கள் சபையினர்

(4176)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-1-30

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - வட்டக்கண்டல் பகுதியில் தள்ளாடி முகாம் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட, வட்டக்கண்டல் அ. த. க. பாடசாலை அதிபர் மற்றும், இரு ஆசிரியர்கள் உட்பட 46 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேடுதல் நடவடிக்கைக்காகப் புறப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை வட்டக்கச்சி - தருமபுரம் வீதியில் வழிமடக்கி முற்றுகையிட்டிருந்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். சம்பந்தன்** [செல்லப்பா ஞானசுந்தரம் - திருக்கோணமலை]

**சுகு** [குமரப்பா ரமேஷ் - கலைக்கேணி கிழக்கு, தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]

1987 ஆம் ஆண்டு இதே தினம் வரையான மூன்று தினங்களும் மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலைப் பகுதியை முற்றுகையிட்டிருந்த சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - மானிப்பாய், நவாலிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - நாட்டுப் பற்றாளர்களான -

**சின்னத்தம்பி சாந்தராசா - கண்ணன்** (தோறார் தோட்டம், நவாலி, மானிப்பாய் - யாழ்ப்பாணம்)

**சுப்பிரமணியம் நித்தியானந்தன்** [நவாலி, மானிப்பாய் - யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் - அளவெட்டிப் பகுதியில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுப் பின், ஆனைக்கோட்டை - ஆறுகால்மடம் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி ஊழியரான தமிழிளைஞன்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் வீரச்சாவெய்திய

**அஜித்** [பசுபதி அரிகரன் - இடதுகரை, முத்தையன் கட்டு - முல்லைத்தீவு]

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மயூரன்** [நாவற்குடா - மட்டக்களப்பு]

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**உஷாந்தன்** [செல்லையா உதயகுமார் - மணற்பகுதி புத்தூர் கிழக்கு - யாழ்ப்பாணம்]

**கிருபா** [சோமசுந்தரம் காண்டீபன் - கைதடி, நாவற்குழி - யாழ்ப்பாணம்]

**வினோத்** [மாணிக்கராசா முரளிதரன் - நாகர் கோவில் வடக்கு - யாழ்ப்பாணம்]

**கவீபன்** [கந்தசாமி யோகநாதன் - வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் - யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992 ஆம் ஆண்டு வவுனியா தந்திரிமலைக் காட்டுப் பகுதியில் யானை தாக்கியதில் படுகாயமுற்றிருந்து சிகிச்சையின் போது எமைப் பிரிந்த - துணைப்படை வீரர் -

**ஆறுமுகம்** [கல்லாறு செட்டிகுளம் – வவுனியா]

மட்டக்களப்பு வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5901)

# வெளிநோயாளர் பிரிவில் மருந்துகள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் கீழ் இயங்கும் மருந்தகத்தில் முக்கியமான மருந்துப் பொருட்கள் இல்லை என்று கூறப்படுகின்றது. இதனால் நோயாளர் தனியார் கடைகளில் மருந்துப் பொருள்களை பொருட்செலவில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ரெற்றாசைக்கிளின், வென்ரோலின், அம்பிசிலின், எரித்திரோமைசின் போன்ற மருந்துப் பொருள்கள் வெளிநோயாளர் பிரிவின் கையிருப்பில் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வேளை சந்தர்ப்பத்தை பயன்படுத்தும் தனியார் வர்த்தக நிலையங்கள் இந்த மருந்துப் பொருள்களின் விலைகளைப் பெருமளவில் உயர்த்தி வருவதாகவும், கடைக்குக்கடை இம்மருந்துப் பொருள்களின் விலை வேறுபட்டுக் காணப்படுவதாகவும், விற்பனைக்கான சிட்டையைக் கொடுக்க கடைக்காரர் மறுப்பு தெரிவிப்பதாகவும் கூறப்படுகின்றது. (நி)

# கல்வி டிப்புளோமா கற்கைநெறிக்கு அநுமதி

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகம் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்புளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் இம் முறை பதிவு செய்ய அநுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பதாரிகள் யாழ் பிராந்திய நிலைய அலுவலகத்துடன் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அலுவலகம் சனி, ஞாயிறு உட்பட கிழமை நாட்களில் திறந்திருக்குமென அறிவிக்கப்படுகின்றது.

மேலும் 90/91 இற்கு முன்னர் பட்ட மேற்கல்வி டிப்புளோமாவிற்கு பதிவு செய்து கற்கை நெறியை தொடராதவர்கள் தமது பதிவை புதிப்பித்துக்கொண்டு கற்கை நெறியைத் தொடரலாமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

# காகிதாதிகள் பற்றாக்குறை நோயாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காகிதாதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், அதனால் நோயாளர் பலர் அவதியுற நேர்வதாகவும் கூறப்படுகிறது. சிகிச்சைக் களங்களில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் வீடு திரும்பும்போது வெளிநோயாளர் பிரிவு மருந்தகத்தில் மருந்துகள் பெறுவதற்காக டாக்டர்கள் வழங்கும் சிட்டைகளை மருந்தக ஊழியர்கள் ஏற்றுக் கொள்வதில்லை எனவும், மருந்தகத்திற்குரிய சிட்டைகள் மற்றும் காகிதாதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (நி)

# புதிய ஆசிரிய மாணவர் அநுமதி

1993ஆம் ஆண்டு ஆசிரியர் கல்விக்காகத் தெரிவு செய்யப்பட்டோர் 02-02-93 இல் அநுமதிக்கப்படுவார்களென கோப்பாய் ஆசிரிய கலாசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அரச சுற்று நிருபங்களில் தமிழ்மொழி புறக்கணிப்பு

(கொழும்புத்துறை)

சிறிலங்கா அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு வரும் பெரும்பாலான அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களின் சுற்றுநிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிப்பு கூடுதலாக இடம் பெற்று தனிச் சிங்களத்தில் மட்டும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியின் பெருமைக்காகக் குரல் எழுப்பி வரும் அரசியல் வாதி ஒருவரின் அமைச்சில் தமிழ்மொழி புறக்கணிப்பு இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் அமைச்சிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் யாவும் தனிச்சிங்களத்திலேயே அனுப்பப்படுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு இன்றி தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபங்கள் கடிதங்கள் தொடர்ச்சியாக கொழும்புத் தலைமைச் செயலகங்களில் இருந்து அனுப்பி வருவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகிறது [24]

## வலி-வடக்கிலிருந்து

# விடுவிக்கப்பட்டு வந்தோர் பலர் வைத்தியசாலையில்

வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து அண்மையில் இராணுவத்தால் விடுதலை செய்யப்பட்ட வயோதிபர்களில் அதிகமானோர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தின் பிடியிலிருந்து கடந்த இருபத்தி மூன்றாம் திகதி அளவெட்டியை சேர்ந்த இருபத்தொரு பேர் விடுதலை செய்யப்பட்டமை தெரிந்ததே. இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் அநேகமானோர் தனிமையில் ஏற்பட்ட தாக்கம், உடலில் ஏற்பட்ட பலவீனம் ஆகியனவே இவர்களது சுகவீனங்களுக்கு முக்கிய காரணம் எனவும், தற்போது யாழ் வைத்தியசாலையில் பல்வேறு சிகிச்சைக் களங்களிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. (நி)

# வடமராட்சி கிழக்கிற்கு 33 ஆசிரியர்கள் நியமனம்

(பருத்தித்துறை)

மிகப்பின்தங்கிய பகுதியான வடமராட்சி கிழக்குப்பகுதியின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கையைக் கருத்திற் கொண்டு வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகம் பயிற்சிபெற்ற 33 ஆசிரியர்களை வடமராட்சி கிழக்கிற்கு அனுப்பிவைத்துள்ளது.

கணித ஆசிரியர்கள் 09 பேரும், விஞ்ஞான ஆசிரியர்கள் 09 பேரும், ஆரம்ப ஆசிரியர்கள் 10 பேரும், மனைப் பொருளியல் ஆசிரியர்கள் 03 பேரும் றோமன் கத்தோலிக்க ஆசிரியர்கள் 02 பேரும் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவு பாடசாலைகளில் பயிற்சி பெற்ற 44 ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கும் நியமனம் பெற்றிருப்பதாகவும் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை அறிவித்துள்ளார். மேலும் வடமராட்சி கிழக்குப் பகுதி பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (25)

# மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்


(கொடிகாமம்)

தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்தவர் மரணமானார்.

கொடிகாமம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த க. வைத்திலிங்கம் (வயது40) என்பவர் கடந்த புதன்கிழமை உயரமான தென்னை ஒன்றில் ஏறியபோது திடீரென தவறுதலாக விழுந்தார். இவரை உடன் யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார். (36)

# சங்கீத பூஷணம் நடராசாவிற்கு இசை பேரறிஞர் விருது

சங்கீத பூஷணம் கே. ஆர். நடராசா அவர்களை இவ்வாண்டிற்கான இசைப் பேரறிஞராக அகில இலங்கைக் கம்பன் கழகம் தெரிவு செய்துள்ளது



திரு. கே.ஆர். நடராசா

யாழ். இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற திரு கே. ஆர். நடராசா அவர்கள் தமது பத்தாவது வயதில் சிதம்பரம் கண்ணன் குடியைச் சேர்ந்த ஆ. இராஜப் பிள்ளை அவர்களிடம் இசைப் பயிற்சியை பெறத் தொடங்கியவர் ஆவார். பின்னர் பரமேசுவர ஐயரிடமும் அவரது இசைப் பயிற்சி தொடர்ந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைப் பயிற்சி பெற்ற அவர் பிரபல்யம்மிக்க சித்தூர் சுப்பிரமணியபிள்ளை அவர்களின் மாணவராவார். அந்தப் பயிற்சியின் விளைவாக 1950 ஆண்டில் சங்கீத பூஷணம் என்னும் சிறப்புப் பட்டத்தை பெற்ற திரு. நடராசா அவர்கள் சித்தூராருடன் இணைந்து ஏறத்தாழ பதினைந்து கச்சேரிகளில் பாடியும் இருக்கின்றார்.

மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக்கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று 1982-198, காலத்தில் பணியாற்றிய இவர் யாழ்ப்பாணம், நாவலப்பிட்டி, மன்னார், பகுதியில் இசையாசிரியராகப் பணியாற்றியும் இருக்கின்றார். இசைத்துறையில் கடந்த சுமார் நாற்பது வருடங்களுக்கும் மேலாக ஈடுபட்டிருக்கும் இவர் ஆயிரம் இசைக் கச்சேரிகளில் பங்குபற்றியும் இருக்கின்றார்.

இவ்விருது வழங்கும் வைபவம் நாளை காலை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா விருதினை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

# மேலும் பன்னிரண்டு பேருக்கு தொண்டர் ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய மேலும் பன்னிரண்டு பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது என யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைகள் கடந்த செப்டம்பர் மாதத்தில் நடைபெற்றது தெரிந்ததே.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு. என் லீலாவதி, ஆர் புஷ்பராணி, எஸ். வீரபாண்டியதாசன், கலாமதி சிவானந்தன், அ நடசெல்வி திரேசா றொயிலின், றீ. றொபேட் ஆனந்தராஜா, ஏ. புளோரிடா, செ. சதேஸ்வரி, திருமதி கே பவளநாதன், வீ. புவனேந்திரராஜா, ஐ. மகேஸ்வரி, வீ சிவமணி

இவர்கள் நேர்முகப்பரீட்சையின்போது கேட்கப்பட்ட சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. ச. சிவசம்பு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. ச சிவசம்பு, உபதலைவர் திரு. வே பொன்னம்பலம், செயலாளர் திரு. ப. கோடீஸ்வரநாதன், உப செயலாளர் திரு. சி துரைராஜா, பொருளாளர் திரு. சி கிட்டினன். ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (24)

★

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்புக் கூட்டம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவமணி சுந்தையா தலைமையில் நடைபெற்றபோது தலைவராக திரு. க. சின்னத்தம்பியும், செயலாளராக திரு. சி. மார்க்கண்டுவும், பொருளாளராக திரு வீ. வடிவேலுவும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

# தியாகராஜ சுவாமிகள் நினைவு இசை ஆராதனை

அகில இலங்கை கம்பன் கழகத்தால் வருடம் தோறும் நடத்தப்படும் சிறி தியாகராஜா சுவாமிகள் இசையாராதனை நாளை காலை ஒன்பது மணி முதல் கம்பன் கோட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்ச்சியில் விருது வழங்கலும், இசைநிகழ்ச்சியும், நாதஸ்வர ஆராதனையும் நடத்தப்பட இருப்பதுடன், மாலையில் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

# முஸ்லிம்கள் அகதியானதிற்கு அரசாங்கமே பொறுப்பு

தமிழர்கள் இனரீதியாக ஒடுக்கப்பட்டமையினாலேயே இன்று வடக்கு-கிழக்கில் அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் பலியாகின்றார்கள். வடக்கிலிருந்து முஸ்லிம்களை அகதிகளாக்கியதும் இந்த அரசாங்கமே எனப் பல்கலைக்கழக முஸ்லிம் சம்மேளனத் தலைவர் நவீன் அமீட் தெரிவித்தார்.

கொழும்பு நுகேகொட சந்தியில் கடந்தபுதன்கிழமை பல்கலைக்கழக மாணவரவை ஒழுங்கு செய்த கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும், எங்கு மக்கள் நசுக்கப்படுகிறார்களோ அங்கு அவர்கள் எதிர்க்கும் சக்தியை மிக விரைவில் அடைந்து விடுவார்கள் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

பெப்ரவரி நான்காம் திகதியன்று இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றுமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது ஆனால் அத்தகைய இடங்களில் சுதந்திர கொடியை ஏற்றுவதற்குக் கூட உரிமை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது இன்று தொழிலாளர் பிரச்சினை. நாளை எமது பிரச்சினை. எனவே இன்றைய சம்பவங்களை நாம் மிகவும் அவதானமாக அவதானிக்கின்றோம் என இங்கு உரை நிகழ்த்திய வண. சந்திர ராகுல தேரோ குறிப்பிட்டார்.

# நுண்கலை அக்கடமியில் பண்ணிசை கற்கைநெறி

இராமநாதன் நுண்கலை அக்கடமியில் 1993 ஒக்ரோபர் முதல் பண்ணிசை ஒரு கற்கை நெறியாக ஆரம்பிக்கப்படவுள்ளது அதேவேளை, அக்கடமியில் கர்னாடக இசை வாய்ப்பாட்டு பயில்பவர்களின் கலைத் திட்டத்தில் பண்ணிசைக் கற்கை நெறியைப் பிணைந்து விதம் சேர்ப்பதற்கான பரிந்துரையைப் பல்கலைக்கழக கலைப்பீடம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் தொழிலை ஒரு கற்கை நெறியாக ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளைத் தலைமையலுவலகம்

## ஊர்காவற்றுறைப் பிரிவின் விசேட பொதுக் கூட்டம்

மேற்படி விசேட பொதுக்கூட்டம் சனிக்கிழமை (06. 02. 93) பிற்பகல் 2.00 மணிக்குக் கிளைத் தலைமையகத்தில் கிளையினால் நடாத்தப்படவிருக்கின்றது. 09. 11 92ஆம் திகதி வரை அங்கத்துவப்பணம் செலுத்திய அங்கத்தவர்கள் மாத்திரம் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றலாம். அங்கத்தவர்களின் தற்போதைய முகவரி இல்லாமையால் தனித்தனிக் கடிதம் அனுப்பப்பட மாட்டாது. எனினும் கூட்ட நிகழ்ச்சியைத் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
29. 01. 1993

கெளரவ செயலாளர்
(சி-5905)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரமலர்வு 12-06-68



வீரஉதிர்வு 31-01-8?

### வீரவேங்கை ரவி
### (கணேசலிங்கம் ரவிச்சந்திரன்)

சுன்னாகத்தில் இந்தியப்படையுடனான மோதலில் தன்னைத்தானேகட்டுவீரச்சாவைத்தழுவிக்கொண்டார்.
ரவி! உனது செங்குருதியால் தீட்டப்பட்ட தியாகவரலாறு
தமிழீழ மக்களின் மனங்களில் பதிந்திருக்கின்றது
வீரமரணங்கள் போராட்டத்தின் சிதைவுகளல்ல
உறுதியாக்கும் உன்னத வார்ப்புக்களே
உனது மறைவு ஐந்து ஆண்டு ஆனாலும் எம்மனங்களில்
என்றும் நீ நிறைந்து இருக்கின்றாய்.

அம்மா குடும்பத்தினர்
கட்டுவன், தெல்லிப்பளை (4175)

## நினைவஞ்சலி கூட்டம்

(தொல்புரம்)

தை மாதத்தில் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த புதன்கிழமை மாலை ஆறு மணியளவில் வட்டுக்கோட்டை கண்ணகைஅம்மன் ஆலயத்துக்கருகாமையில் சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் திரு. மதிஅண்ணா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர்உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## விசேட பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

ஈச்சமோட்டை கலட்டிப் புலம்அருள்மிகு ஸ்ரீஞானவைரவர்தேவஸ்தான யாப்பு விதிகள் மாற்ற விஷேட பொதுக் கூட்டம் நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 00மணிக்கு ஆலயமண்டபத்தில் தலைவர்திரு.ச தவசீலன் தலைமையில் நடைபெறும்.

ஆலயத்தின் சகல பொதுச் சபை உறுப்பினர்களையும்இக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி செயலாளர் திரு. து. கமலநாதன் தெரிவித்துள்ளார். (24)

## இழுவைப் படகு மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்ட இரண்டு இழுவைப் படகுகளில் ஒன்று நேற்றுமுன்தினம் பருத்தித்துறைக் கடலில் மூழ்கிவிட்டதாக தெரியவருகின்றது.

இவ் இழுவைப் படகு பழுதடைந்தமையினால் சில நாட்களாக கடலில் கட்டப்பட்டிருந்தது இருந்தும் இப்படகில் ஏற்பட்டிருந்த சிறு துவாரங்களினால் கடல் நீர் உட்சென்றதினாலேயே கடலில் மூழ்கியதாக மேலும் தெரிய வருகின்றது. (பா)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிளையினால் தையல் பொருட்கண் காட்சியும், விற்பனையும் இன்று காலை 8 30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இவ் ஆரம்ப வைபவத்தில் பிரதமவிருந்தினராக திருமதி ப. திலகநாயகம் போல் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக செல்வி லூசி திரு.க. கனகரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்

மேலும் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கலைநிகழ்ச்சிகளும், விற்பனையும் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்படுகின்றது.


A/L முடிவுகளுக்காகக் காத்திருந்தவர்களுக்கோர்
அரிய சந்தர்ப்பம்!

Computer Programming
*IN*
Basic Language
*4 MONTHS*

வகுப்புகள் ஆரம்பம்
வார நாள் : 01 — 02 — 93
வார இறுதி : 06 — 02 — 93

Lectures BY
S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (Lond)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ. 400/- மட்டுமே.

I. A.B. Lotus 1 2-3, Shorthand & Typing
நடைபெறுகின்றன.

School of Business Administration
(PIONEERS IN COMPUTER EDUCATION)
16, 3rd CROSS STREET, JAFFNA
(சி-5903)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்
21-08 1984

தரணியின் அடியில்
31-12-1992

### செல்வி நாராயணன் திவ்வியாழினி
### (ஆண்டு 3- புனித ஜோன் பொஸ்கோ)

தெய்வ மகளாந் திவ்வி யாழினி
வையம் மதிக்க மலர்ந்த பின் - உய்ய
திங்களோர் காலஞ்சென்றதை நாமெண்ணி
மங்களமாய் வாழ்த்துவம் மணந்து

அன்னார் யாழ். போதனா வைத்திய சாலையில் நோயுற்றிருந்த வேளையில் சிகிச்சை அளித்த வைத்தியர்கட்கும், தாதி உத்தியோகத்தர்கட்கும், ஊழியர்கட்கும் இரத்ததானம் செய்தவர்களுக்கும், இரத்தானம் செய்யமுன்வந்த நண்பர்களுக்கும் மரணச்சடங்கில்கலந்து கொண்டு ஆறுதலும் தேறுதலும் கூறி உதவிகள் புரிந்த அயலவர், நண்பர்கள் ,உறவினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

உன்பிரிவால் துயருறும்
பப்பா, மம்மி, அக்காமார், தாத்தா
அம்மம்மா, மாமா மாமி,
சித்தப்பாமார். சித்திமார்,
மைத்துனர். தங்கையர்,
உற்றார், உறவினர்கள்.

167/11, கோயில்வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
(4155)


சமுத்திரா உற்பத்தி நிலையம்
பிரதான வீதி, தொல்புரம், சுழிபுரம்
'வளம் பேணுவோம் வளமுடன் வாழ்வோம்'



அடை முட்டைத் திட்டம்

எமது நல்ல இன கோழி முட்டைகளை உங்கள் அடைக் கோழிக்கு வைத்து பொரிக்கும் குஞ்சுகளை எமக்குத் தந்து அதன் பெறுமதிப்பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள். இத்திட்டத்திற்கான ஊக்குவிப்பு போட்டியையும் நடத்துகின்றோம். இப் போட்டியில் உடன்பங்குபற்றி பின்வரும் பரிசுகளைப்பெறுங்கள்.

நீங்கள் எம்மிடம் மேற்படி ஒப்படைக்கும் குஞ்சுகள்
500 க்கு ஒரு முட்டையிடும் ஊர்க்கோழி
750 க்கு 10 நல்ல இன ஒரு மாதக் குஞ்சுகள்
1000 க்கு 15 நல்ல இன ஒருமாதக் குஞ்சுகள்
போட்டி முடிவுத் திகதி: 31 - 12 - 1993

30—1—1993 (சி-5898)
-நிர்வாகிகள்

### சிந்தனைக்கு

இளைஞர்களின் கல்வி புறக்கணிக்கப்படும் ஒரு சமுதாயத்தில் பக்தியோ, அறமோ, சுதந்திரமோ, நீண்ட நாள் தழைக்க முடியாது.

— வில்லியம் கூப்பர்


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 30-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
க. பெ. எண் - 05


## கானல் நீராய் கற்கைநெறிகள்

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நெறிக்கு 199)ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விண்ணப்பித்தவர்களை பதிவு செய்வதற்கு தற்பொழுது அனுமதி கிடைத்திருப்பதாகவும், எனவே விண்ணப்பதாரிகள் இம்மாகம் 31ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்துடன் தொடர்பு கொளளுமாறு யாழ். பிராந்திய உதவிப்பணிப்பாளரின் அறிவித்தல் ஒன்று தெரிவிக்கின்றது.

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விண்ணப்பித்தவர்களை இரண்டு வருடங்கள் முழுமையாகப் பூர்த்தியானதன் பின்னர், பதிவு செய்ய அனுமதிப்பது என்பது ஒருபுறம் இருக்க, திறந்த பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்வதால் இவர்கள் தமது கற்கை நெறியை நிறைவு செய்ய முடியுமா என்ற கேள்வியே மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில் 1991 ஜனவரியில் பத்திரிகையியல் என்னும் ஓர் கற்கை நெறியை இத்திறந்த பல்கலைச்கழகம் ஆரம்பிப்பதாக விளம்பரம் செய்தது. பலர் 900 ரூபா அளவில் செலுத்தி இக் கற்கை நெறியில் பயில பதிவு செய்து கொண்டார்கள். ஆனால், பதிவு செய்ததுடன் கற்கை நெறி தரித்துவிட்டது.

இதேபோன்றே, கணணி பயிற்சி நெறி, முகாமைத்துவ கற்கை நெறி, ஆங்கில பயிற்சி நெறி, பொறியியல் கற்கை நெறிகள், படவரையியல், போன்றவற்றிற்கும் இப் பல்கலைக்கழகத்தில் பதிவுகள் இடம் பெற்றன. ஆனால், எவையும் முழுமையாக நடைபெற்றதாகவில்லை. இவ்வாறு இடம் பெற்ற பதிவுகளினால், பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அதாவது இம் மாணவர்களிடம் பணத்தை இப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளதோடு, அவர்களின் நம்பிக்கையையும், முயற்சியையும் வீணடித்துள்ளது.

இந்நிலையே இன்று கல்வி டிப்ளோமா பயிற்சி குறித்த கேள்வியை எழுப்பவைத்துள்ளது. ஏனைய துறைகளுக்குப் பதிவு செய்து கற்கை நெறியைத் தொடரமுடியாமல் போனதுபோன்று இதற்கும் ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகின்றது.

பொதுவாகவடபகுதியில் ஒருகல்வி ஆண்டுக்குள் கற்கைநெறிகளை முடிக்காமை, கல்வி ஆண்டுகளை தாமதமாகஆரம்பித்தல், பரீட்சைகளை தாமதமாக நடத்துதல்,அரைவாசிப் பரீட்சையை நடத்தி அரைவாசிப்பரீட்சையை நடத்தாதுவிடுதல், விசேட பரீட்சைகள் நடத்துதல் போன்ற யாவற்றிற்கும் இன்றுள்ளநெருக்கடிநிலையே காரணம் என அதிகாரிகள் கூறலாம். ஆனால் இந் நெருக்கடியில் எதை நடத்தலாம் எதை நடத்த முடியாது என்பதையும், ஒரு பயிற்சி நெறியை நடத்த எவ்வளவு காலம் தேவை என்பன போன்றவற்றை நன்கு சிந்தித்து திட்டமிட்டு அதிகாரிகள் செயலாற்றினால் ஓரளவேனும் அவற்றை வெற்றிகரமாக நடத்தி முடிக்கலாம் என்றே கூறலாம்.

அதைவிடுத்து எதுவித முன் ஏற்பாடும் இன்றி கற்கை நெறிகளை ஆரம்பிப்பதும் பின்னர் அவற்றைக் கைவிடுவதும், பரீட்சைகளை நடத்தாமல் விடுவதும் இங்குள்ள அதிகாரிகளின் திட்டமிடலில் உள்ள குறைபாடு என்றே கூறவேண்டும், யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்திலும் கற்கை நெறிகள் இடம்பெறுகின்றன, பரீட்சைகள் நடைபெறுகின்றன போன்ற வெளிப்பாட்டை மட்டும் ஏற்படுத்திவிட்டு வெறுமனே சும்மா இருப்பது ஒரு வகையில் சிங்கள அரசின் பிரசாரத்திற்குத் துணைபோகும் செயலாகவும், தமிழினத்திற்கு கேடு விளைவிக்கும் ஒரு நடவடிக்கையாகவுமே அமையும் என்பதில் சந்தேகங்கொள்ள ஏதுமில்லை.

## புலிகளின் ஆதரவாளர்கள் மீது தமிழகத்தில் தீவிர நடவடிக்கை

### - தலைவர்கள் கைது; கட்சிகளை தடைசெய்ய யோசனை

(சென்னை)

தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகச் செயற்படும் பாட்டாளி மக்கள் கட்சியை தடை செய்வதற்கான முயற்சியில் இந்திய மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகள் உயிரிழந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமிழகத்தில் சில நடவடிக்கைகளில் பாட்டாளி மக்கள் கட்சி ஈடுபட்டிருந்தது தெரிந்ததே.

பாட்டாளி மக்கள் கட்சியை தடை செய்யும் விவகாரம் விரைவில் தமிழக அரசிடம் பாரப்படுத்தப்பட இருப்பதாகவும், தமிழக அரசும் மத்திய அரசின் முயற்சிக்கு ஆதரவைத் தெரிவிக்கும் என்றும் புதுடில்லியில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதே வேளை ஈழத்தமிழர்கள் நடத்தும் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவு தெரிவிக்கும் பாட்டாளி மக்கள் கட்சிமீது தடை விதிக்கப்பட வேண்டும் என்று ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுகொண்டுள்ளார்.

இதனிடையே தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் மதுரையில் வைத்தும், பாவலரேறு பெருஞ்சித்திரனாரும், அவரது மகன் பொழிலனும் சென்னையில் வைத்தும் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாத மற்றும் தேசவிரோத செயல்கள் தடுப்பு நடவடிக்கைக்கான விசேட சட்டமான தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்படும் எவரும் பிணையில் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என்பதுடன் சிறப்பு நீதிமன்றத்தினாலேயே விசாரணை செய்யப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெடுமாறனை நீதிமன்றக்காவலில் வைக்க உத்தரவு

[சென்னை]

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மதுரையில் வைத்து கடந்த புதன்கிழமைகைது செய்யப்பட்ட நெடுமாறன் தேச விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு சென்னை சிறப்பு நீதிமன்றத்தினால் நீதிமன்றத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பாட்டாளி மக்கள் கட்சியின் மௌன ஊர்வலத்திற்கு தமிழக அரசு தடை

தளபதி கேணல் கிட்டு உட்பட வீரச்சாவடைந்த பத்து வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்து முகமாக தமிழ் நாட்டில் நடாத்தப்படவிருந்த மௌன ஊர்வலத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து அவ் ஊர்வலம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

அண்மையில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எம். பி. ஆசாத் என்ற கப்பலில் பயணம் செய்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளையும் கைது செய்ய இந்தியக் கடற்படையினர் முயற்சித்தபோது அவர்கள் கப்பலைத் தகர்த்து வீரச்சாவடைந்தது தெரிந்ததே.

மேற்படி நிகழ்வில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்து முகமாக பாட்டாளிமக்கள்கட்சிமௌன ஊர்வலம் ஒன்றை நடாத்த திட்டமிட்டிருந்தது தெரிந்ததே இவ் ஊர்வலத்தை நடாத்த தமிழ்நாடு அரசு அனுமதி வழங்க மறுத்து விட்டது.

இது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராம்தாஸ் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவைப்பெற்றதும் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கட்சியைத் தடை செய்தால் கடும்விளைவு ஏற்படும்

### பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடை செய்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ் எச்சரித்துள்ளார்.

மதுரையில் கூட்டம் ஒன்றில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார். திராவிடக் கழகத்தினர் தமிழர்களின் நலனுக்கு எதிராகச் செயற்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

## புகையிரத நிலையங்களில் ஹிந்தியை அழிப்போம்

### - வீரமணி எச்சரிக்கை

தமிழ் நாட்டில் மீண்டும் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளின் நேரத்தை மத்திய அரசு பெப்ரவரி 10 ஆம் திகதிக்குள் அதிகப்படுத்தாவிட்டால் தமிழ் நாட்டில் அனைத்துப் புகையிரத நிலையங்களிலும் உள்ள ஹிந்தி எழுத்துக்கள் அழிக்கப்படும் என்று திராவிடக் கழகத் தலைவர் கே. வீரமணி கூறியுள்ளார்.

கும்பகோணத்தில்திராவிடக் கழகத் தொண்டர்களிடையே பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

### சில பொருள்களின் தடை நீங்கலாம்

(கொழும்பு)

வடபகுதி கொண்டுவர தடை விதிக்கப்பட்ட பொருள்களில் சிலவற்றின் மீதான தடைகள் நீக்கப்படுவதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாக நேற்று முன் தினம் செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது, சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

கைதான

உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நபர் நாட்டிற்கு ஜனவரி 16ஆம் திகதி வந்ததாகவும், இவர் கைது செய்யப்பட்டது 26 ஆம் திகதி என்றும் இது வரை காலம் இவர் என்ன நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று தெரியாது என்றும் அவ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். இந்த சுவிஸ் பிரஜைக்கு விடுதலைப் புலிகளின் தளபதிகேணல்கிட்டு மற்றும் எம். பி. ஆசாத். கப்பலின் கப்டனான ஜெயச்சந்திரன் போன்றோருடன் தொடர்புகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக பொலிசார் கூறியுள்ளனர்.

கைதாகிய

கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று கருதப்படுகிறது. இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை உறுதி செய்துகொள்ள முடியவில்லை.

மன்னார் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்படவில்லை என்பது மன்னார் அரச அதிபர் மூலமாக ஏற்கனவே உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பலாலியில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பது குறித்த தகவல்களை மிக விரைவில் உறுதி செய்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஈ]

அரச

பொழுது மாறிவிட்டது. இதற்கு காரணம் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் இணையத்தின் தலைவராக திரு. நளின் டி சில்வா இருக்கிறார். இவரது தலைமையிலேயே ஊதிய உயர்வு குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

ஜே. வி. பியின் மூலவளம் பல்கலைக்கழக வன்முறையாகவே இருந்தது. அதேபோன்ற பாணியில் திரு. நளின் டி சில்வாவும் செயல்படுகின்றார் இவ் இயக்கத்தின் சிங்களத் தேசியவாதக் கொள்கைபரந்த நோக்கம், பரந்த சிந்தனை ஆகியவற்றுக்கு முற்றிலும், மறுதலையானது. மேலை நாட்டுப் பண்பாடும் ஆங்கில மொழியும் இலங்கைச் சமுதாயத்தைக்கெடுக்கிறது என்பதும் இவ்வியக்கத்தின் மற்றுமொரு கருத்தாகும்.

நாகதாளி

டின் உட்பாகம் சிறுதுண்டுகளாக்கப்பட்டு சமையல் செய்யப்படுவதாகவும், அவித்து சுவையூட்டப்பட்டு சுவைமிகுந்த களியாக உண்ணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் புரியாணி போன்ற உணவுப் பொருள்களில் மரக்கறி வகையாக நாகதாளி சேர்க்கப் படுவதாகவும் அவித்து சிறு துண்டங்களாக்கப்பட்டு வெங்காயம் தயிர் போன்றவற்றுடன் சேர்த்து உண்ணலாம்.

# சுதந்திரத்திற்காக மாணவர் கிளர்ந்தெழ வேண்டும்

– துணைவேந்தர் துரைராசா

அனர்த்தங்களுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ந்தெழ வேண்டும். பல்வேறு நாடுகளிலும் ஒடுக்குமுறைக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ந்தெழுந்து போராடியுள்ளனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் மாலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற ''விடியலைத் தேடும் பறவைகள்'' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. சந்திரசேகரர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: எந்தவொரு மனிதனும் அனர்த்தங்கள் விளையும்போது அதற்குஎதிராக செயற்படுவது வழக்கம். அந்த உணர்விலேயே கிளர்ந்தெழுந்து அதற்காகப் போராட வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு உண்டு.

தமிழினம் ஒரு தனித்துவமான, சுதந்திரமான இனமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பதற்கு தமிழீழப் பொருளாதாரத்தை விருத்தி செய்து சொந்தக் காலில் நிற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# போராட்டத்தால் தமிழினத்தை உலகறியச் செய்துள்ளோம்

## -தமிழ்ச்செல்வன்

(நமது நிருபர்)

உலக வரைபடத்தில் தமிழீழம் மிகச்சிறியதொரு புள்ளியாகும். தமிழினம் என்றொரு இனம் உள்ளது என்பதையும் தமிழருக்கென ஒரு போராட்டம் நடைபெறுகிறது என்பதனையும் எமது போராட்டத்தின் மூலம் உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம். என நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற 'விடியலைத் தேடும் பறவைகள்' இசை நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்புத் தளபதி தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் எங்கோ நடக்கின்ற சில சம்பவங்களைக்கூட விடுதலைப் புலிகளோ எனச் சந்தேகிக்கின்ற அளவிற்கு எமது வீரம், எமது போராட்டம், எமது தலைமையின் வழிகாட்டல், எமது போராளிகளின் தியாகம், அர்ப்பணிப்பு என்பன உலகிற்கு உணர்த்தியுள்ளன.

நிச்சயமாக நாம் இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவோம். அதற்காக இந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற அனைத்துத் தரப்பினரும் இந்த போராட்டத்தின் அவசியத்தை உணர்ந்து எமது மக்களின் நிரந்தரமான நிம்மதியான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அதற்காக எமது போராட்டத்தோடு பல்கலைக்கழக மாணவர்கள் மிகநெருக்கமாகச் செயற்பட்டு எமது போராட்டத்தினதும் எமது மண்ணினதும் மக்களினதும் வளர்ச்சிக்கான சேவைகளை ஆற்ற வேண்டும்.

இந்த நம்பிக்கையைப் பல்கலைக்கழக மாணவர்கள் வெளியிட்டுள்ள 'விடியலைத் தேடும் பறவைகள்' இசை நாடா வெளியீடு எடுத்துக் காட்டுகிறது என்றார்.

## வீரச்சாவு



வீரவேங்கை
நெடுங்கிளியன்

இலாலி கடற்பரப்பில் கடந்த 27-ம் திகதி சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை நெடுங்கிளியன் (சிவராசா வெற்றிவேல்-செங்கலடி, மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஏழைகள்

பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் அது எடுக்காதுள்ளது.

அரசின் இத்தகைய நிலைப்பாடு மாணவர்களை மிகவும் விரக்தி நிலைக்குத் தள்ளியுள்ளது. இலங்கையில் 40 லட்சம். மாணவர்கள் இருக்கிறார்கள். இம் மாணவ சக்தி மகத்தானது என்பதை அரசு உணரவேண்டும்.

தனியார் பல்கலைக்கழகங்கள் நாட்டில் உருவாகியதன் மூலம் பத்துலட்சம் ரூபாவுடன் ஒருவர் பட்டதாரியாகக் கூடிய நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால் இது வசதி படைத்தோருக்கு மட்டுமே சாதகமானது. மாறாக கஷ்ரப்படும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு இவ்வளவு தொகைப் பணத்தைச் செலவிட முடியுமா என்பதை அரசு உணரத் தவறிவிட்டது என்றார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 02 | | 17 |
| — | | — |
| 05 | | 12 |
| — | | — |
| 1967 | | 1992 |



### கப்டன்
### மணிவாளன் / சந்திரன்

[மார்க்கண்டு சிறிஸ்கந்தராசா
தங்கபுரம், வவுனியா]

அன்புக்குரியவனே! எமதினிய சந்திரனே!
மணிவாளன் என்ற அழகான பெயரோடு
நீ அன்று அலேறு போல் சென்று,
ஆகுதி ஆனவனே.
செந்தமிழ் ஈழத்தின் சீர் கொண்ட
வவுனியாவின், சிப்பிக்குள் முத்தென
மணிவாளா நீ பிறந்தாய்!
சிங்களப் படைகளுடன் செங்களமாடியே
நீ மறைந்தாய்!
உயிரது அடங்கி நீ உறங்கினாலும்
உன்புகழ் வாடா மல்லிகையாய்
மணம் வீசும் எம் மனதில் எந்நாளும்!...

30-01-93 இன்று சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் 45-ம் நாள் நினைவுநாளில், சக போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்,

சி. கார்த்திகேசு, குடும்பத்தினர்,
நுணாவில் கிழக்கு, மாமி, மச்சான்மார்,
பெரியதம்பிரான் கோவிலடி, மச்சாள்மார்
சாவகச்சேரி, (சி-5906)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## சிவசுப்பிரமணியம் இராசலட்சுமி

(குண்டங்கரை, களபூமி, காரைநகர்)

காரைநகர், களபூமி, குண்டங்கரையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் இராசலட்சுமி 26-1-93 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன், திலகவதி, தனபாக்கியம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. விக்கினேஸ்வரன்
(மகன்)

668, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (4181)

## கனகரெத்தினம் ஜெகரூபி

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் 605/1 கே. கே. எஸ். வீதியில் வசித்தவருமாகிய செல்வி கனகரெத்தினம் ஜெகரூபி 24 - 1 - 93 இல் காலமானார்.

இவர் P. T. கனகரெத்தினம் – சரஸ்வதி ஆகியோரின் அன்பு மகளும் ஜீவராணி, ஜீவரஞ்சினி, அம்பிகாதேவி, யசோரதி, செந்தில்ரூபன், தர்மரூபன் ஆகியோரின் சகோதரியும், மகேந்திரன் சிவநாதன், கௌரிகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற உலகநாதன் தம்பிராசா, சண்முகம், கனகரெத்தினம், தெய்வேந்திரன், காலஞ்சென்ற பரமசாமி, நாகேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் மருமகளும் இலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30 - 1 - 93 இன்று பி. ப. 2. 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
605/1 K. K. S. வீதி, நா. கனகரெத்தினம்
யாழ்ப்பாணம். (4182)

## பூதர் சின்னராசா

(மடுராணி லொறி உரிமையாளர்)

காங்கேசன்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், இடம்பெயர்ந்து சித்தன்கேணியில் வசித்து வந்தவருமான பூதர் சின்னராசா 29-01-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், ஜெபந்தி, வசந்தி, தாசன், சசி, ராயுமேன், கயல்விழி, மலர்விழி, ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை, தவேந்திரன் ஆகியோரின் மாமனாரும், திவ்யநாத், கௌமியன், கவிவர்மன், தாரங்கினி, ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்துரை, சின்னமணி இராசமணி, இரத்தினம், பூமணி, காலஞ்சென்ற இரத்தினம், சின்னக்கிளி, அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரலிங்கம், ரஞ்சன், பரமநாதன், மகம், கமலா ஆகியோரின் மைத்துனரும், சாரதாவின் அன்பு அண்ணனும், ராகவேந்திரன், ரகுநந்தனின் அன்பு மாமாவும் ஆவார் இவரது ஈமக்கிரியைகள் 29-01-93 நேற்று மாலை 6 மணியளவில் நடைபெற்றது இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(4183) சி. ராயுமேன் (மகன்)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 29- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8182

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-0560, 24 6161, 42-9220, 40 7207, 41-9167, 28 6748, 41-6933, 26-6461, 41-9663, 40-1737. 41-1092, 24-4103, 26 5962, 26-3356, 42-9325, 40-4429.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-4265, 42-3368, 40-0770, 40-6979, 27-2053, 26-3690, 27-4301, 27-5482, 24 3436, 26-1376, 42-7975, 24-5127, 26-5071, 28 - 657, 41-5015, 27 9771, 26-8839, 28-2156, 26-3633, 26-3582,

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.